## துறையூர் நகராட்சி

2020ஆம் வருடம் ஜூன் மாதம் 30.06.2020ஆம் செவ்வாய் கிழமை (தமிழ் விகாரி வருடம் ஆனி மாதம் நாள்.16) பிற்பகல்4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட்ட சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை:திரு.து. தமயந்தி,
தனி அலுவலர்

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 30.06.2020 | 01 | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) ஜூன் மாதம் 2020 நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு** :பதிவு செய்யலாம். | தீர்மான எண்:436<br>பதிவு செய்யப்பட்டது |
| 30.06.2020 | 02 | துப்புரவு அலுவலர் ஜூன் மாதம் 2020 நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு** :பதிவு செய்யலாம். | தீர்மான எண்:437<br>பதிவு செய்யப்பட்டது. |
| 30.06.2020 | 03 | இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரிகட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம், நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், சுவாமிநாதன் தினசரிமார்கெட் கடைகள் **8,15,16,17,18,34,43,44.மற்றும் 45 க்கான குத்தகை உரிமம் , வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17 அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலகவளாக புதிய கடை எண் 2,4,5, 9,10 மற்றும் 18 கடைகளுக்கும் குத்தகை உரிமங்கள் 2020-2021, முதல் 2022-2023 முடிய மூன்றாண்டுக்கான உரிமம் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 24.03.2020-ம் தேதி** நடைபெறும் விபரத்தினை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. | தீர்மான எண்:438<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>வ. எண்</td><td>விளம்பரம்செய்யப்பட்ட நாளிதழ் பெயர்</td><td>விளம்பரம் செய்யப்பட்டநாள்</td><td>தொகை (ரூபாய்)</td></tr>
<tr><td>1</td><td>மக்கள்குரல், திருச்சி பதிப்பு</td><td>14.03.2020</td><td>ரூ.22,176/-</td></tr>
</table>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு ADWAVE ADVERTISING RIVATE LTD, CHENNAI, நிறுவனம் ரூ.22,176/- வழங்க கேட்டுக்கோன்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.380/2020/அ1<br>
அலுவலககுறிப்பு: அ) அனுமதிக்கலாம்<br>
ஆ) செலவினத்தை நகராட்சி பொதுநிதிலிருந்து செலவு செய்யலாம்
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.06.2020</td>
<td>04</td>
<td>துறையூர் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு. எம். ராமராஜ், என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.06.2020-ல் ஓய்வு பெற உள்ளார். ஆதலால் அரசாணை எண் 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.08.2007-ன் படி அன்னாருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதிக்கான நிர்வாக பங்குத்தொகை ரூ.10000/- வழங்கப்பட வேண்டி உள்ளது. எனவே மேற்படி பங்குத்தொகையினை திரு.எம்.ராமராஜ், தூய்மை பணியாளருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.456/சி1/2020.)<br>
அ.கு: அ. அனுமதிக்கலாம்.<br>
ஆ. மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:439 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.06.2020</td>
<td>05</td>
<td>துறையூர் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.பி.செல்வராஜ், என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.06.2020-ல் ஓய்வு பெற உள்ளார். ஆதலால் அரசாணை எண் 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.08.2007-ன் படி அன்னாருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநல நிதிக்கான நிர்வாக பங்குத் தொகை ரூ.10000/- வழங்கப்பட வேண்டி உள்ளது. எனவே மேற்படி பங்குத் தொகையினை திரு. பி.செல்வராஜ், தூய்மை பணியாளருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.455/சி1/2020.)<br>
அ.கு: அ. அனுமதிக்கலாம்.<br>
ஆ. மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:440 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.06.2020</td>
<td>06</td>
<td>துறையூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகன எண்.TN45X7856 மற்றும் TN45V0856 ஆகிய இரு வாகனங்களுக்கும் 2020-2021-ம் ஆண்டு காப்பீட்டு தொகை செலுத்த வேண்டும். TN45X7856 ரூ.30696/- மற்றும் TN45V0856 ரூ.18134/-ம் மொத்தம் ரூ.48830/- ஐ</td>
<td>தீர்மான எண்:441 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>UNITED INDIA INSURANCE COMPANY LIMITED என்ற நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1263/2013/எச்1)<br>அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.06.2020</td>
<td>07</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.06.2020ம் தேதிகோரப்பட்டது. வரிசை 1 முதல் 5 வரை கண்டுள்ள இனத்திற்கு ஏல பொறுப்புத்தொகை எவரும் செலுத்தாததால் ஏலக் கேள்வி ஏதும் இல்லை. மேலும் மேற்காணும் இனங்களுக்கு மறு ஏலம் கோர மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>குத்தகை இனம் விபரம்</th></tr>
<tr><td>1.</td><td>துறையூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம்.</td></tr>
<tr><td>2.</td><td>துறையூர் நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல செய்துகொள்ளும் குத்தகை உரிமம்.</td></tr>
<tr><td>3.</td><td>துறையூர் நகராட்சி சுவாமிநாதன் தினசரி மார்க்கெட் கடைகள், 15,16,17,34,42,43,44 மற்றும் 45க்கான குத்தகை உரிமம் (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.</td></tr>
<tr><td>4.</td><td>வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17(ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்)</td></tr>
<tr><td>5.</td><td>துறையூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலக வளாக புதிய கடை எண் 2,4,5,9,10 மற்றும் 18 (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்).</td></tr>
</table>
ந.க.எண்.380/2020/அ1<br>
அலுவலக குறிப்பு :<br>
மேற்காணும் குத்தகை இனங்கள் வரிசை எண் 1 முதல் 5 வரை கண்டுள்ள இனங்கள் நகராட்சி பொறுப்பில் உள்ளது என்பதை மன்றம் பதிவு செய்யலாம். மேலும் வரிசை எண்.2,3,4, மற்றும் 5ல் கண்டுள்ள இனங்கள் ஏலம் போகாததால் கேட்பு இல்லை எனவும் வரிசை எண்.1, இந்நகராட்சி அண்ணாபேருந்து நிலையத்தில் 01.06.2020-ம் தேதி முதல் பேருந்துகள் குறைவான அளவில் வந்து செல்கிறது. இப்பேருந்துகளிடம் தினசரி கட்டணம் வசூல் இந்நகராட்சி பணியாளரை கொண்டு வசூல் செய்து இந்நகராட்சியில் செலுத்தப்பட்டு வருகிறது. என்பதனை பதிவு செய்யவும் மேற்காணும் வ.எண்.1 முதல் 5 வரை உள்ள இனங்கள் மறு ஏலம் விடவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:442<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 30.06.2020 | **08** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி, பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.28369/ஜெ3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோர்சிங் முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண். 381 நாள் 30.03.2020 ல் 01.04.2020 முதல் 31.06.2020 முடிய 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை தடுப்பு பணியாக 144 ஊரடங்கு தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.ஆதலால் மனித ஆற்றல் சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை உள்ளதால் பொது மக்கள் பொது சுகாதாரம் நலன் கருதி மேற்படி பணிகளுக்கு 01.07.2020 முதல் 30.09.2020 வரை ( மூன்று மாதங்கள் ) சுய உதவிக் குழுக்கள் 32 பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களது 2017-18 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக் கூலி ரூ.295 அடிப்படையில் ரூ.9,00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்டுள்ள சுகாதார பணிகளை இந்நகராட்சி செலவலினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4244/2018/எச்1)<br>**அ.கு :** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:443<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.06.2020 | **09** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க. எண். 28369/து3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோசிங் முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது இதனை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.382 நாள். 30.03.2020 ல் 01.04.2020 முதல் 31.06.2020 முடிய 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை தடுப்பு பணியாக 144 ஊரடங்கு தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.ஆதலால் மனித ஆற்றல் சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை பணி, சுகாதார பணிகள், நுண்ணியிர் உரம் தயாரிக்கும் பணிக்கும், பொது மக்கள் பொது சுகாதாரம் நலன் கருதி மேற்படி பணிகளுக்கு 01.07.2020 முதல் 30.09.2020 வரை (மூன்று மாதங்கள்) சுய உதவிக் குழுக்கள் மூலம் நுண்ணியிர் உரம் தயாரிக்கும் பணிக்கு 24 பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களது 2017-18 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக் கூலி ரூ.295 அடிப்படையில் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்டுள்ள சுகாதார பணிகளை இந்நகராட்சி செலவலினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் | தீர்மான எண் :444<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4244/2018/எச்1)<br>**அ.கு:** மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.06.2020 | **10** | துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மற்றும் குடும்ப நலம் திருச்சிராப்பள்ளி அவர்களின் ந.க.எண்.27-அ3-2017 நாள். .06.2017ன் கடிதத்தில் டெங்கு சிக்கன்குனியா கட்டுப்பாட்டு கொசு ஒழிப்பு பணி தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக (Domestic breeding checker) களப்பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.383 நாள். 30.03.2020 ல் 01.04.2020 முதல் 31.06.2020 முடிய 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. தற்பொழுது கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை தடுப்பு பணியாக 144 ஊரடங்கு தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளதாலும் மனித ஆற்றல் சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை உள்ளதாலும் இந்நகராட்சி 24 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு நடவடிக்கையாக ஒவ்வொரு வீடுகளாக சென்று source reduction பணி மேற்கொள்ளவும் மற்றும் கொசு புழு ஆதாரங்களை அதன் ஆரம்பநிலையிலேயே கண்டறிந்து அபேட் மருந்திட்டு அழிக்கவும் முதிர் கொசுக்களை கொசு புகைமருந்து அடிப்பான் இயந்திரங்கள் கொண்டு அழித்திடவும் மற்றும் தெருக்களில் பயனற்ற வகையில் உள்ள டயர்கள், உடைந்த மற்றும் தேவையற்ற பிளாஸ்டிக் தென்னைமட்டை, கொட்டாங்குச்சி, கண்ணாடி பொருட்கள், ஆட்டு உரலில் தேங்கியுள்ள நாள்பட்ட தண்ணீரை நீக்குதல் மற்றும் அரசு மற்றும் அரசு சாரா தனியார் அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் குடிநீர் தொட்டிகள் சுத்தமாக வைத்துள்ளதை உறுதி செய்தல், நகராட்சி எல்லைக்குட்பட்ட மருத்துவமனைகளை சுகாதாரமாக வைத்துள்ளதை உறுதி செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு நடவடிக்கை மற்றும் கொரோனா தொற்று நோய் பராவமல் இருக்க உரிய நடவடிக்கைகளுக்கு 30 களப்பணியாளர்களை 01.07.2020 முதல் 30.09.2020 முடிய நியமித்து கொள்ளவும் மேற்கண்ட பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களது விலைவிகிதத்தில் அமர்த்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.8.00 லட்சதிற்கு மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2177/13/எச்1)<br>**அலுவலக குறிப்பு**: இப்பணியின் அத்தியாவசிய தேவையினை கருத்தில் கொண்டு 01.07.2020 முதல் 30.09.2020 முடிய 3 மாதங்களுக்கு உள்ளூரில் இயங்கி வரும் மகளிர் சுய உதவிக்குழுக்களை கொண்டு பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் வருவாய் நிதியில் செய்துக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:445<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td>30.06.2020</td><td>11</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.7 அர நடராஜன் காலனி மற்றும் வார்டு எண்.24 லெட்சுமிகாந்தபுரம் ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால் சீரமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1609/2020/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:446<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.06.2020</td><td>12</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.2 வடக்கு ரத வீதியில் உள்ள அங்கன்வாடி மையக்கட்டிடத்தில் மழைநீர் வடிகால் அமைத்தல், பிளாட்பார்ம் மற்றும் Hand Rail அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1658/2020/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>மேற்படி செலவினம் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண்:447<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.06.2020</td><td>13</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.22 மற்றும் 14 பகுதியில் குப்தா ஸ்டோர் முதல் சௌண்டீஸ்வரி அம்மன் கோவில் தெரு முடிய புதிதாக காவிரி குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1659/2020/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:448<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.06.2020</td><td>14</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.18 பாரதி நகர் குறுக்குத் தெருவில் பழுதடைந்த தார்சாலையினை புதுப்பித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.1.70 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.431 நாள்.29.05.2020-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 19.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.14% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.R.கார்த்திகேயன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.17% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.14% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.1305/2020/இ1<br>அலுவலக குறிப்பு : மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:449<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td>30.06.2020</td>
<td>15</td>
<td>துறையூர் நகராட்சி வார்டு எண்.19 மலையப்பன் சாலை சுடுகாடு பழுதான சுற்றுச்சுவர் சீரமைத்தல், 2 எண்ணிக்கை மெயின்கேட் அமைத்தல் மற்றும் நுண்ணுயிர் செயலாக்க மையக்கழிவறையில் மின்விளக்கு வசதி ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்கு மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.430 நாள்.29.05.2020-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 19.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.12% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.R.கார்த்திகேயன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.14% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.12% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.1305/2020/இ1<br>
அலுவலக குறிப்பு : மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:450<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.06.2020</td>
<td>16</td>
<td>துறையூர் நகராட்சி வார்டு எண்.14 சௌண்டீஸ்வரி அம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள 2 எண்ணிக்கை பழுதடைந்துள்ள கைபம்பு சீரமைத்தல் பணி, வார்டு எண்.7 வேங்கடத்தானூர் சாலை ஆழ்துளை கிணறு மற்றும் வார்டு எண்.9 பெரியார் நகர் நுண்ணுயிர் செயலாக்க மையம் ஆழ்துளை கிணறு ஆகியவற்றில் மின்மோட்டார் சீரமைத்தல் பணி மற்றும் வார்டு எண்.16 காந்திரோடு பகுதியில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி ஆகியவற்றிற்கு மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.428 நாள்.29.05.2020-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 19.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.13% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.18% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.13% குறைவாக உள்ளது</td>
<td>தீர்மான எண்:451<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.1305/2020/இ1<br>**அலுவலக குறிப்பு** : மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம் | |
| 30.06.2020 | **17** | துறையூர் நகராட்சி வார்டு எண்.7 திரௌபதி அம்மன் கோவில் தெருவில் குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டு தண்ணீர் குழாய் புதிதாக அமைத்தல் மற்றும் இதற்காக வெட்டப்படும் சாலையினை சீரமைத்தல் பணிக்கு (Patch Work) மதிப்பீடு ரூ.2.70 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.429 நாள்.29.05.2020-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 19.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.<br>வ.எண் / ஒப்பந்ததாரர் பெயர் / ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்<br>1 / திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் / மதிப்பீட்டை விட 0.15% குறைவு<br>2 / திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர் / மதிப்பீட்டை விட 0.17% அதிகம்<br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.15% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.1305/2020/இ1<br>**அலுவலக குறிப்பு** : மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:452<br>அனுமதிக்கப்பட்டது |
| 30.06.2020 | **18** | துறையூர் நகராட்சி தற்போது தேர்வுநிலை நகராட்சியாக செயல்பட்டு வருவதில் 14.55 ச.கி.மீ பரப்பளவு உள்ளதாகவும், 9.80 கி.மீ நெடுஞ்சாலைகளை உள்ளடக்கியும் உள்ளது. துறையூர் நகராட்சியின் அருகாமையில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிறு ஊராட்சிகளும் அமைந்துள்ளன. இவற்றில் பொதுமக்களுக்கு துறையூர் நகராட்சியின் எல்லை நிர்ணய பகுதிகளை குறிப்பாக பெரம்பலூர் சாலை, ஆத்தூர் சாலை, திருச்சி சாலை ஆகிய மூன்று இடங்களில் தெளிவாக உணர்த்திடும் வண்ணம் 3 எல்லை போர்டுகள் அமைத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.40 இலட்சத்திற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள்.05.06.2020-ல் அனுமதி வழங்கியதை தொடர்ந்து மேற்படி பணிக்கு 24.06.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.<br>வ.எண் / நிறுவனத்தின் பெயர் / ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்<br>1 / TECO ASPHALT, K.K.NAGAR, CHENNAI / மதிப்பீட்டை விட 0.14% அதிகம் | தீர்மான எண்:453<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | <table><tr><td>2</td><td>SIGN TEC,<br>KARUMANDAPAM, TRICHY</td><td>மதிப்பீட்டை விட 0.07% குறைவு</td></tr></table><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.2-ல் உள்ள SIGN TEC, TRICHY என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.07% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.1675/2020/இ1<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. எல்லை நிர்ணயங்களை மேற்படி 3 இடங்களில் அமைப்பதன் மூலம் அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு மிகுந்த பயனளிக்கும் என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.06.2020 | **19** | துறையூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட விஸ்தரிப்பு பகுதிகளான சுந்தராபுரம், சாமிநாதன் நகர், முத்துநகர் மற்றும் Bypass தெற்கு பகுதி ஆகிய பகுதிகளில் தெரு விளக்குகள் புதிதாக அமைக்க ரூ.9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மேற்படி பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 நிதியிலிருந்து மேற்கொள்ள, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை உத்தரவு எண்.2714/2017/அ3 நாள்.28.12.2017-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு பகுதி பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியில் ஒரு பகுதியான சாமிநாதன் நகர் பகுதியில் தெருவிளக்கு அமைக்கும் பணிக்கு புதிய மின் இணைப்பு வளர்ச்சிக்கட்டணம், மதிப்பீட்டு கட்டணம் மற்றும் வைப்புத்தொகை கட்டணம் ரூ.2,55,477/- என தமிழ்நாடு மின்சார வாரியம், துறையூர் அவர்களின் கேட்பு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்படி பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் பெரும்பாலும் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் அமைந்துள்ளது. மேலும் ஒருசில அங்கீகரிக்கப்படாத மனைகள் தற்போது அரசாணை எண்.78 நாள்.04.05.2017 (வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை)-யின் படி வளர்ச்சி கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டு மனைகள் வரன்முறை செய்யப்பட்டு வருகிறது. மனை வரன்முறை செய்து வசூலிக்கப்படும் வளர்ச்சிக் கட்டணம் இந்நகராட்சி பொது நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்படி பணியானது பொதுமக்களின் அத்தியாவசிய பணியாக மேற்கொள்ளப்படுவதால் இப்பணிக்கான வளர்ச்சிக்கட்டணம், மதிப்பீட்டு கட்டணம் மற்றும் வைப்புத்தொகை ரூ.2,55,477/-யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு | தீர்மான எண்:454<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தலாம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1829/2017/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் மனை ஒப்புதல் வளர்ச்சி கட்டண நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. இந்நகர்மன்ற தீர்மான எண்.380 நாள்.30.03.2020-ஐ ரத்து செய்து மன்றம் அனுமதிக்கலாம். | |

ஒம்/-து.தமயந்தி
தனி அலுவலர்

/உண்மை நகல் /

ஆணையர்(பொ),
துறையூர் நகராட்சி